No. of Printed Pages : **8**

1649128 **9001**

பதிவு எண் | 5 | 6 | 6 | 0 | 4 | 1 | 4 |

# மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. **14x1=14**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல் ________.

(அ) இலக்கண விளக்கம் (ஆ) தண்டியலங்காரம்

(இ) தொல்காப்பியம் (ஈ) முத்துவீரியம்

**2.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (1) | சேரன் | (i) | மீன் |
| (2) | சோழன் | (ii) | யானை |
| (3) | பாண்டியன் | (iii) | வில் |
| (4) | சங்ககாலப் பசும்பூண் பாண்டியன் | (iv) | புலி |

(அ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)

(ஆ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

(இ) (1)-(i), (2)-(iii), (3)-(iv), (4)-(ii)

(ஈ) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)

[ திருப்புக

3. பிழையான தொடரைக் கண்டறிக.
(அ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.
(ஆ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
(இ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.
(ஈ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

4. 'பிறகொரு நாள் கோடை' கவிதையின் ஆசிரியர் :
(அ) நக்கீரர்
(ஆ) தண்டி
(இ) நகுலன்
(ஈ) அய்யப்ப மாதவன்

5. ''உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்'' என்று அழைக்கப்படுவது :
(அ) மணிமேகலை
(ஆ) கம்பராமாயணம்
(இ) புறநானூறு
(ஈ) சிலப்பதிகாரம்

6. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
(அ) கடுக்காய்
(ஆ) வசம்பு
(இ) மாவிலைக்கரி
(ஈ) மணத்தக்காளியிலைச் சாறு

7. 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
(அ) ஜெயமோகன்
(ஆ) புதுமைப்பித்தன்
(இ) எஸ். இராமகிருஷ்ணன்
(ஈ) கு. அழகிரிசாமி

8. 'குடும்பம்' என்னும் சொல் முதன் முதலில் இடம் பெற்றுள்ள நூல் ________.
(அ) குறுந்தொகை
(ஆ) தொல்காப்பியம்
(இ) புறநானூறு
(ஈ) திருக்குறள்

9. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



(அ) வினைத்திட்பம் என்பது ஒருவன் மன
மற்றைய எல்லாம் பிற.
(ஆ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப என்
திண்ணியர் ஆகப் பெறின்.
(இ) எவ்வது உறைவது உலகம் உல
அவ்வது உறைவது அறிவு.
(ஈ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெ
அச்சாணி அன்னார் உடைத்து.

10. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (1) | பாரதியார் | (i) | மருமக்கள் வழி மான்மியம் |
| (2) | பாரதிதாசன் | (ii) | ஏசுகாவியம் |
| (3) | கவிமணி | (iii) | பாஞ்சாலி சபதம் |
| (4) | கண்ணதாசன் | (iv) | பாண்டியன் பரிசு |

(அ) (1)-(iii), (2)-(ii), (3)-(i), (4)-(iv)
(ஆ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)
(இ) (1)-(ii), (2)-(iv), (3)-(iii), (4)-(i)
(ஈ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

11. ஈற்றடி எழுதித் **துளிப்பாவை** நிறைவு செய்க.

பூத்த
மலரொன்று
பறக்கிறது
________

(அ) வண்ணத்துப்பூச்சி (ஆ) ஈசல்
(இ) விட்டில்பூச்சி (ஈ) பொன்வண்டு

12. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழ் அறிஞரைக் கண்டறிக.
சிறுகதை ஆசிரியர்; முதல் பாதி நவீனம்
(அ) புதுமைப்பித்தன் (ஆ) அம்பை
(இ) சூடாமணி (ஈ) அசோகமித்திரன்

13. புதிருக்கு ஏற்ற விடை தருக.

அடைமழை பெய்த அடுத்த நாள்
படைபடையாய் வந்ததாம்
பரங்கி நாட்டு விமானம்
எதிரி சுடாமலேயே
இறகொடிந்து இறந்ததாம் - என்ன ?

(அ) மீன் (ஆ) பறவை (இ) நட்சத்திரம் (ஈ) ஈசல்

14. இலக்கணக் குறிப்பு தருக.
'வியர்வை வெள்ளம்'
(அ) உருவகம் (ஆ) உவமை
(இ) பண்புத்தொகை (ஈ) வினையெச்சம்